**செய்தி வெளியீடு எண் : 1002** **நாள்: 20.06.2022**

செய்தி வெளியீடு

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் மாமல்லபுரத்தில் வருகிற 2022– ஜூலை 28– முதல் ஆகஸ்ட் 10 வரை நடைபெறவுள்ள 44– வது செஸ் ஒலிம்பியாட் தொடர்பான முன்னேற்பாடு பணிகளை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய தலைமை செயல் அலுவலர் / உறுப்பினர் செயலர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன் இ.ஆ.ப. அவர்கள் மற்றும் அரசு அலுவலர்களுடன் மாமல்லபுரம், பூஞ்சேரியில் இன்று (20.06.2022) நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்விற்கு பின், மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன் , விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர். திரு.சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:–

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கையினால் 44–வது செஸ் ஒலிம்பியாட் இதுவரை எந்த நாட்டிலும் இது போன்ற போட்டி நடத்தப்படவில்லை என உலகமே வியக்கும் வகையில் தமிழ்நாட்டில் நடைபெறவுள்ளது. இப்போட்டிக்கான ஏற்பாடுகள் தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் 19.06.2022 அன்று டெல்லியில் இப்போட்டிக்கான ஒலிம்பிக் சுடரினை ஏற்றி வைத்துள்ளார். இந்த ஒலிம்பிக் சுடர் 75 முக்கிய நகரங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஜூலை 28–ஆம் தேதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் போட்டி நடைபெறுகின்ற விளையாட்டு அரங்கத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது. இப்போட்டிக்காக சர்வதேச தரத்திலான 52–ஆயிரம் சதுர அடி பரப்பிலான நவீன விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இங்கு ஏற்கெனவே உள்ள 22– ஆயிரம் சதுர அடி பரப்பிலான அரங்கமும் நவீனப்படுத்தப்படுகிறது. இதில் விளையாட்டு வீரர்களுக்காக 500 செஸ் போர்டுகள் அமைக்கப்படவுள்ளது. இப்போட்டி நடைபெறுவதையொட்டி பொதுப்பணித்துறை மூலம் சாலைகள் மேம்படுத்தப்படுகிறது. மின் வாரியம், போக்குவரத்து, சுகாதாரம் போன்ற பல்வேறு துறைகள் மூலம் பணிகளை மேற்கொள்ள 19 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அடங்கிய குழுவினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அமைத்துள்ளார்கள்.

இப்போட்டியில் 187 நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் பங்கேற்கவுள்ளனர். இப்போட்டியில் இந்தியாவிலிருந்து 4 அணிகள் , பிற நாடுகளிலிருந்து 227 அணிகள் பங்கேற்கவுள்ளன. வீரர்களின் நலன் கருதி சுகாதாரமான உயர்தர நட்சத்திர ஹோட்டல்களில் தங்கும் வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கொரோனா பரிசோதனை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மருத்துவத்துறை மூலம் மேற்கொளப்படும் .

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இப்போட்டியில் பங்கேற்கும் வீரர்களுக்கு 15 நாட்களுக்கான ரூபாய் 2 இலட்சம் காப்பீடு வசதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளார்கள் எனக் கூறினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in